செ.வெ.எண்:04 நாள்: 02.10.2019

# அரியலூரில் அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு தீபாவளி கதர் சிறப்பு விற்பனையினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்இ.ராஜேந்திரன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் புதிய மார்கெட் தெருவில் கதர் அங்காடி வளாகத்தில் 150வது அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப்படத்தினை திறந்து வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, தீபாவளி சிறப்பு விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தலைமையில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இவ்விழாவில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.ராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது:-**

கதர் ரகங்களை தயாரிப்பதில் இந்தியாவிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. மக்களின் மனதை கவரும் வண்ணம் புதிய வடிவமைப்புகளில் நெசவு செய்யப்படும் கதர் ஆடைகளும், கிராமங்களில் வாழும் கைவினை இளைஞர்களால் புதிய உத்திகளுடன் தயாரிக்கப்படும் கவினை பொருட்களும் தமிழகத்தில் உள்ள கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கதர் துணிகளின் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியத்தின் மூலம் ஆண்டு முழுவதும் அனைத்து கதர் ரகங்களும் 30 சதவீதம் தள்ளுபடி வழங்கப்பட்டு வருகிறது.

அரியலூர் மாவட்டத்தில் கதர் விற்பனை நிலையத்தின் மூலம் தீபாவளி சிறப்பு விற்பனை ரூ.20 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்கள் அதிக அளவு கதர் ஆடைகளை பயன்படுத்தி நெசவாளர்களின் வாழ்வு சிறக்க அனைவரும் உதவிட வேண்டும். மேலும், மத்திய, மாநில அரசு ஊழியர்களுக்கு மாதாந்திர தவணை முறையில் விற்பனை செய்யப்படுகிறது. இவ்விற்பனையினை அரசு ஊழியர்களும் பயன்படுத்திக் கொள்ளவும்.

கதர் நெசவாளர்களின் மேம்பாட்டுக்காக கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியத்தின் மூலமாக கதர் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களில் பணிபுரியும் நூற்பாளர் மற்றும் நெசவாளர்களின் குடும்பத்தினருக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, விபத்து, இயற்கை மரணத்திற்க்கான உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. கைவினைஞர்கள் நெசவாளர்களின் வாழ்வு சிறக்க அவர்களால் தயாரிக்கப்படும் கைவினைப்பொருட்களையும், கதர் ஆடைகளையும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், இளைஞர்கள், அரசு ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் அனைவரும் வாங்கி பயன்பெறமாறு மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இரா.ஜெயஅருள்பதி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் க.சரவணன் (செய்தி), அ.எழிலரசன் (விளம்பரம்), அரியலூர் காதிகிராப்ட் மேலாளர் சு.முத்துப்பழனு, சோப்பு வளர்ச்சி அலுவலர் ரெங்கசாமி மற்றும் முக்கிர பிரமுகர்கள், அரசு ஊழியர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**